# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை,** (Pension Pay Office பின்புறம்),
**நந்தனம், சென்னை– 600 035.** தொலைபேசி எண். 044-29515590

## <u>விசாரணை நாள் 10.07.2026</u>

**<u>முன்னிலை</u>**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண் SA 11947-E-2024</u>**

திரு க.இரவிச்சந்திரன் .. மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/ .. பொது அதிகார அமைப்பு
உதவி ஆணையர் - 6
வருவாய் மற்றும் பேரிடர்
மேலாண்மை துறை
சேப்பாக்கம், சென்னை -5

******

**<u>ஆணை</u>**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (10.07.2027) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மேல்முறையீட்டாளர் | திரு க.இரவிச்சந்திரன் ஆஜராகவில்லை |
| தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறைகள்) விதிகள், 2012 விதி 7-ன்படி மனுதாரரின் வருகை கட்டாயமானதாகும். எனவே, அவரது வருகையின்மையை ஆணையம் பதிவு செய்கிறது | |
| பொது அதிகார அமைப்பின் சார்பாக | வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் உதவி ஆணையர்-6 திருமதி வெ.அல்லி ஆஜரானார். |
| சட்டப்பிரிவு 6(1) மனு நாள் | 20.06.2024 |
| **<u>கோரிய தகவல்</u>**:-<br><br>தவறான தகவல்களை அளித்து வாரிசு சான்றிதழ் பெறுபவர்களுக்கு எதிராக குற்றவியல் வழக்கு பதிவு செய்து காவல்துறை மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென வருவாய் நிர்வாக ஆணையர் அனைத்து வருவாய் அதிகாரிகளுக்கும் அனுப்பியுள்ள சுற்றறிக்கையின் நகலை வழங்கும்படி கோரியுள்ளார். | |

| | |
|---|---|
| பொதுத் தகவல் அலுவலர் பதில் கடிதம் | இணைக்கப்பட்டுள்ளது |
| சட்டப்பிரிவு 19(1)-ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனு நாள் | 26.07.2024 |
| சட்டப்பிரிவு 19(3)-ன் கீழ் இரண்டாவது மேல்முறையீட்டு மனு நாள் | 10.09.2024 |

2) மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ் வருவாய் நிர்வாகத் துறையின் பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பிய மனு தொடர்பாக தனக்கு தகவல் வழங்கப்படவில்லையெனக் கூறி, சட்டப்பிரிவு 19(1)-ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவையும், பின்னர், சட்டப்பிரிவு 19(3)-ன் கீழ் இரண்டாவது மேல்முறையீட்டு மனுவையும் அனுப்பியுள்ளதை தொடர்ந்து, அம்மனு மீது இன்று விசாரணை மேற்கொள்ளப்படுகிறது.

3) இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கோரிய தகவல்கள் தொடர்பாக அவருக்கு 29.10.2024 மற்றும் 07.07.2026 ஆகிய தேதிகளில் பதில் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவித்து அவற்றின் நகல்களையும், அதற்கான தபால்துறை ரசீதின் நகல்களையும் ஆணையத்தில் சமர்ப்பித்தார்.

4) விசாரணையின் முடிவில் இவ்வாணையம் கீழ்க்கண்ட உத்தரவை பிறப்பிக்கிறது:-

**மனுதாரர் 20.06.2024 நாளிட்டு அனுப்பியுள்ள 6(1) மனுவிற்கு பொதுத் தகவல் அலுவலர், நான்கு மாதங்கள் கழித்து, 29.10.2024 அன்று தான் முதன் முதலாக பதில் கடிதம் அனுப்பியுள்ளார் என்பதை ஆணையம் பதிவு செய்கிறது. ஆகவே. தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 குறித்துரைத்த காலத்திற்குள் மனுதாரருக்கு தகவல் வழங்காத அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் யார் என்பதை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் துணை ஆணையர் கண்டறிந்து அவர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 20(1) மற்றும் 20(2) ஆகியவற்றின் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்கான எழுத்து மூலமான விளக்கத்தை பெற்று, அதை தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் மூலம் இவ்வாணையத்தில் 20.08.2026 அன்று நேரில் சமர்ப்பிக்க வேண்டுமென ஆணையம் உத்தரவிடுகிறது.**

**ஒம்/- (அபய் குமார் சிங்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண் வழக்கு எண் SA 11947-E-2024</u>**

**<u>பெறுநர்</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
உதவி ஆணையர்-6,
வருவாய் மற்றும் பேரிடர்
மேலாண்மை துறை
சேப்பாக்கம், சென்னை -5

திரு க.இரவிச்சந்திரன்,
எண்.51, கோவிந்தராஜன் தெரு,
மணவாளன் நகர்,
பழைய பெருங்களத்தூர்,
சென்னை - 600 063

Copy to file
CR/PA